Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 22/2024**

**Deposition of PW.4 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணாகோமதி | ஜாதி | : | |
| க/பெ | : | விக்ரம் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | பிள்ளையார்நத்தம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 24/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் பிள்ளையார்நத்தத்தில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். எதிரி நாச்சிமுத்து எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு இரவு 10.00 மணியைபோல நான், எனது அண்ணன், அண்ணி, அம்மா, அப்பா ஆகியோர்கள் என் குழந்தையை வைத்துக்கொண்டு வீட்டில் இருந்தபோது பொதுவாக நாச்சிமுத்து தேவிடியான மகனே மற்றும் ஆபாசமான வார்த்தைகளால் அவரது வீட்டிலிருந்து திட்டிக்கொண்டிருந்தார். என் அண்ணன் ஹரிஹரன் பக்கத்தில் உள்ளவர்களுக்கு தொந்தரவாக உள்ளது, குழந்தைக்கு தொந்தரவாக உள்ளது என்று கேட்டபோது நீ என்ன கேட்கிறாய் என்று சொல்லி என் அண்ணனை ஆபாசமாக பேசினார். அதற்கு உடனே எதிரி கத்தியை எடுத்து வந்து நீ ஏன் கேட்கிறாய் என சொல்லி வலது புற கண் புருவத்துக்கு மேலே வெட்டிவிட்டார். என் அண்ணனுக்கு ரத்தம் வந்தது. திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு 3, 4 நாட்கள் உள்நோயாளியாக என் அண்ணன் சிகிச்சை பெற்றார்.

வழக்கு சம்பவத்தின் போது சம்பவம் பக்கத்து வீட்டுக்காரர்கள் பாண்டி, அழகு ஆகியோர்களுக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி நாச்சிமுத்துவுக்கு வயது 65 இருக்கும் என்றால் சரிதான். எதிரி நாச்சிமுத்துவுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். உங்கள் அண்ணன் 3 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நீங்கள் சொல்வது போல் உங்கள் அண்ணன் மருத்துவமனையில் உள்நோயாளியாக இல்லை என்றும், மருத்துவமனைக்கு சென்றுவிட்டு முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு அதன்பிறகு காவல்நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. பாண்டி, அழகு ஆகியோர் அருகில் இருந்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி வயதானவர் என்றும், உங்கள் அண்ணனிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றும், புகார்தாரர் உங்கள் அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நீங்கள் வீட்டிற்கள் இருந்தீர்கள் என்றால் சரியல்ல. எதிரி கத்தியை எடுத்து உங்கள் அண்ணன் கண் புருவத்தில் வெட்டிவிட்டு இருட்டில் ஓடிவிட்டார் என்று கூறுவது பொய் என்றும், வயதானவர் என்பதால் அவரால் ஓட முடியாது என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன விபதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor